**செ.வெ.எண்: 09** **நாள்: 05.01.2018**

**அரிமளம் ஊராட்சி ஒன்றியத்தில் ரூ. 20.74 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சிப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

புதுக்கோட்டை மாவட்டம், அரிமளம் ஊராட்சி ஒன்றியத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சி திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள் (04.01.2018) அன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கும்மங்குடி ஊராட்சி, வடக்கு பொந்துபுளியில் மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் ரூ.9.80 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் பொந்துபுளீ கண்மாய் மற்றும் வரத்துவாரி தூர்வாரும் பணியையும், தனி நபர் இல்ல கழிவறை கட்டும் திட்டத்தின்கீழ் தலா ரூ.12,000 மதிப்பீட்டில் கட்டப்பட்ட 2 தனிநபர் கழிவறைகள் கட்டுமானப் பணியையும், பிரதம மந்திரி வீடு கட்டும் திட்டத்தின்கீழ் தலா ரூ.1.70 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் 2 வீடுகள் கட்டுமானப் பணியையும், நாட்டாம்பட்டியில் தாய் திட்டத்தின்கீழ் ரூ.7.30 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஆவுடையார் கண்மாய் மேம்பாட்டு பணியையும் என மொத்தம் ரூ.20.74 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சிப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வில் கண்மாய் மற்றும் வரத்து வாரிகளை சரியான அளவுகளில் முறையாக தூர்வாரவும், தனிநபர் கழிவறைகளை தினமும் உரிய முறையில் பயன்படுத்தி சுகாதாரம் பேணவும், முடிவுற்ற பணிகளை உரிய முறையில் பராமரிக்கவும் மேலும் நடைபெறும் பணிகளை தரமான கட்டுமானப் பொருட்களை கொண்டு கட்டி முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள் உத்தரவிட்டார்.

இந்த ஆய்வின் போது வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.நடராஜன் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**